# NFTE - BSNL
# சென்னை தொலைபேசி மாநிலச் சங்கம்

## ஊழியருக்கான பதவி உயர்வு கொள்கை ஒரு குறைபிரசவமே

அருமைத் தோழர்களே!

பி.எஸ்.என்.எல். நிர்வாகம் 23.03.2010ல் புதிய பதவி உயர்வு கொள்கை அமுலாக்கம் குறித்து உத்தரவு வெளியிட்டதை அனைவரும் அறிவோம். அனைவருக்கும் ஐந்து கட்ட பதவி உயர்வை (Five Promotions) பெற்றுத்தருவோம் என தோழர் நம்பூதிரி 2002 டிசம்பரில் வாய்ச்சவடால் அடித்தார். 2002 முதல் நடைபெற்ற அனைத்து தேர்தல்களிலும் இந்த வாக்குறுதியை அவர் ஊழியருக்கு அளித்து வந்தார். 2004 டிசம்பரில் அங்கீகாரம் கிடைத்த பிறகும் 2010 வரை வாக்குறுதியளித்தபடி நமது ஊழியருக்கு ஐந்து பதவி உயர்வை அவரால் பெற்றுத்தர இயலவில்லை. அதிகாரிகள் 01.10.2004 முதல் மிகச்சிறந்த பதவி உயர்வு திட்டத்தை பெற்று அனுபவித்து வருகின்ற போதிலும் நமது ஊழியருக்கு ஐந்து பதவி உயர்வு என்பது இன்னமும் எட்டாக்கனியே. இப்பதவி உயர்வுக்கான ஒப்பந்தத்தை நிர்வாகத்துடன் 2008 அக்டோபரில் கையெழுத்திட்ட பிறகும் அங்கீகரிக்கப்பட்ட சங்கத்தால் கடந்த 17 மாதங்களாக அதனை அமுலாக்க முடியவில்லை. மிகவும் காலதாமதமாக அமுலாகவுள்ள இந்த பதவி உயர்வு திட்டத்தில் கோளாறுகளுக்கும், குறைகளுக்கும் பஞ்சமே இல்லை. அதிகாரிகள் பெற்று அனுபவித்து வரும் பதவி உயர்வு திட்டத்திற்கு இணையாக ஊழியர்கள் பதவி உயர்வை பெறத் தவறியதால் ஊழியர்களுக்கும் அதிகாரிகளுக்கும் இடையில் பதவி உயர்வில் பாரபட்சம் நிலவுகிறது ; நிரந்தரமாகிவிட்டது.

**அதிகாரிகளுக்கு ஐந்தாண்டுக்கு ஒருமுறை என ஐந்து பதவி உயர்வுகள் வழங்கப்படுகிறது. ஆனால் அங்கீகரிக்கப்பட்ட சங்கம் ஒப்புக் கொண்டுள்ள புதிய பதவி உயர்வு திட்டத்தின்படி ஊழியர்களுக்கு எட்டு ஆண்டுக்கு ஒருமுறை மொத்தத்தில் நான்கு பதவி உயர்வுகள் மட்டுமே கிடைக்கும். இதுதவிர இத்திட்டத்தில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த SC/ST ஊழியர்களுக்கு இந்திய அரசியல் சட்டத்தில் உறுதி செய்யப்பட்டுள்ள இடஒதுக்கீடும் (Reservation) மறுக்கப்பட்டுள்ளது.**

ஊழியருக்காக அறிவிக்கப்பட்ட பதவி உயர்வு திட்டத்தை கூர்ந்து ஆய்வு செய்தால் அதில் ஊழியருக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய பல அம்சங்கள் உள்ளதை உணரமுடியும். கடந்த காலங்களில் NFTE - BSNL உருவாக்கிய OTBP / BCR / Grade IV பதவி உயர்வுகளை எள்ளி நகையாடியவர்கள் இப்போது படுமோசமான பதவி உயர்வு திட்டத்தை நமது ஊழியர்கள் மீது திணித்துவிட்டு அதனை மிகச்சிறந்த பதவி உயர்வு திட்டமாக சித்தரித்து பேசுவதும் எழுதுவதும் கண்டனத்துக்குரியது.

- 2004-ல் பதவி உயர்வை பெற வேண்டுமானால் ஊழியர்கள் 01.10.200-க்குப் பிறகு பெற்ற பதவி உயர்வுகளை 'சரண்டர்' செய்ய வேண்டும்.
- 01.10.2000க்கு பிறகு ஒருவர் டெலிகாம் மெக்கானிக், TTA அல்லது Sr.TOA என எந்த ஒரு பதவி உயர்வு பெற்றிருந்தாலும் அதுவே முதல் பதவி உயர்வாக கருதப்படும். அடுத்த பதவி உயர்வுக்காக அவர் ஏழாண்டுகள் காத்திருக்க வேண்டும்.
- சேவையில் இளையவர் (Junior) கூடுதல் சம்பளம் பெற்றுவிட்டார் என மூத்தவர் (Senior) ஒப்பிட்டு Stepping up இனிமேல் கோர முடியாது.
- இது Automatic Promotion அல்ல. மாறாக ஒரு ஊழியர் இப்பதவி உயர்வினை பெற Fitness பெற்றிருக்க வேண்டும். CR-ல் 'சராசரி' (Average) என எழுதிவிட்டால் ஊழியருக்கு பதவி உயர்வு கிட்டாது. இதேபோல 'Adverse Entry' இருந்தாலும் ஆபத்து தான்.
- ஒரு ஊழியர் 2000 முதல் 2004 வரை வேறெந்த பதவி உயர்வும் பெறாதிருந்தால் மட்டுமே இப்பதவி உயர்வு வழங்கப்படும். எனினும் அவருக்கு 2004 முதல் ஊதிய நிலுவை கிடைக்காது. அது 01.04.2008 முதல் தான் கணக்கிடப்பட்டு வழங்கப்படும்.
- DOT யிலிருந்து BSNL-க்கு விருப்பம் தெரிவித்து சேர்ந்தவர்களுக்கு மட்டும் 4, 7, 8, 8 ஆண்டுகளில் நான்கு பதவி உயர்வுகள் வழங்கப்படும். நேரிடையாக BSNL-லில் சேர்ந்தோருக்கு 8, 8, 8, 8 ஆண்டுகளில் தான் அப்பதவி உயர்வுகள் வழங்கப்படும்.
- இப்பதவி உயர்வு திட்டத்தில் ரூ.9,200 மற்றும் ரூ.9,850 ஊதிய விகிதங்கள் இடம் பெறவில்லை. இதனால் மூத்த ஊழியருக்கு நன்மை ஏதும் இல்லை.
- விருப்பம் (Option) கொடுத்தாலும், கொடுக்காவிட்டாலும் புதிய பதவி உயர்வு திட்டம் (NEPP) அனைத்து ஊழியருக்கும் அமுலாகிவிடும். குறிப்பிட்டு OTBP / BCR / Grade IV பதவி உயர்வு தொடர வேண்டுமென ஊழியர் விருப்பம் தெரிவித்தால் மட்டுமே அவை அவருக்குத் தொடரும்.
- TTA கேடர் ஊழியருக்கு ரூ.7,800 மற்றும் ரூ.8,570 என இரண்டு ஊதிய நிலைகள் மட்டுமே பதவி உயர்வுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. எனவே அக்கேடர் ஊழியருக்கு 3வது மற்றும் 4வது பதவி உயர்வுகளுக்கு என்ன ஊதியம் என்பதே குறிப்பிடப்படவில்லை.
- பெரும்பான்மையான ஊழியர்களுக்கு 2011ல் தான் பதவி உயர்வு கிட்டும். அதுவே அவர்களுக்கு முதலும் கடைசியுமான பதவி உயர்வாக இருக்கும். மொத்தத்தில் ஐந்து பதவி உயர்வு என துவங்கிய வாக்குறுதி உத்தரவின்போது நான்காகி ஊழியர்கள் அதனை பெறும்போது அது ஒன்றாக சிறுத்துப் போய்விட்டது.
- Grade IV பதவி உயர்வு பெற்றுவிட்டவர்களுக்கு புதிய பதவி திட்டத்தால் கூடுதலாக எதுவும் கிட்டாது.

NFTE - BSNL இக்குறைபாடுகளை நீக்க நிர்வாகத்திடம் கோரிக்கை வைத்துள்ளது. பேச்சு வார்த்தை தொடர்கிறது. Option கொடுக்கும் காலக்கெடுவை நீடிக்க வேண்டுமெனவும் நிர்வாகத்தை நாம் கேட்டுள்ளோம். எனவே ஊழியர்கள் Option கொடுக்க அவசரம் / பதற்றம் காட்டத் தேவையில்லை.

தோழமை அன்புடன்

**(சி.கே.மதிவாணன்)**
மாநிலச் செயலாளர்.
**Mobile: 9487621621**